Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

11-10-1993

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நாளிதழ் Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 25 (11-10-1993) திங்கட்கிழமை ஓசை 235

## தனியார் கல்வி நிலையங்களின் வகுப்புக்களுக்கு நேரத்தளர்வு

க. பொ. த. சாதாரணம் (ஆண்டு 11), உயர்தரம் (ஆண்டு 12, 13) தனியார் கல்வி நிலைய வகுப்புக்களுக்கான நேரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட வகுப்புக்களுக்கு புதன்கிழமை வார விடுமுறையாகும். ஏனைய பாடசாலை நாட்களில் மாலை நேர வகுப்புக்களும், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் முழு நாள் வகுப்புக்களும் நடத்தலாம். மேலும் தவணை விடுமுறை நாட்களில் திங்கள், வெள்ளி கிழமைகளில் பகல் 12 00 மணிக்கு மேலும் ஏனைய நாட்களில் முழுமையாகவும் 11, 12, 13-ம் ஆண்டுகளுக்கான வகுப்புக்கள் தடையின்றி நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது என தனியார் கல்வி நிலைய மேற்பார்வை அலுவலகம் தெரிவித்துள்ளது.

# கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

# தமிழ் இளைஞர்கள் கைது!

## புலிகள் தற்கொலைப் படை ஊடுருவலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் கொழும்பு நகருக்குள் ஊடுருவியிருப்பதாக சிறிலங்கா புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து கொழும்பின் பாதுகாப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை கொழும்பில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும் அதிகரித்துள்ளது. அண்மையில் கொழும்பு முகத்துவாரம் பகுதியில் தற்கொலைப் படையாளியின் அங்கியொன்றினை பொலிசார் கண்டெடுத்துள்ளதைத் தொடர்ந்தே அங்கு பதற்ற நிலை அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் சில தினங்களுக்குமுன் ஆறு தமிழ் இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

வீதியில் சென்ற இளைஞர்கள் மீது சந்தேகத்தின் பேரில் பொலிசார் சோதனை நடத்தியதிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பிரிவைச் சேர்ந்த மூவர் அண்மையில் கொழும்பிறகு வந்திருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தகவலை அடுத்து கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் பாதுகாப்பு அதிகரித்துள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார் என்... ...ள்ளது.

கடந்த வாரம் முகத்துவாரம் பகுதியில் கைது செய்...

மேலும் அப்பகுதியில் தற்கொலைப் படையாளி அணியும் அங்கியொன்று வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே

## தகவல் கொடுப்போருக்கு 5 இலட்சம் சன்மானமாம்

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் பகுதியில கடந்தவியாழனன்று கண்டெடுக்கப்பட்ட தற்கொலைப்படை வீரர் ஒருவர் பயன்படுத்துவதற்குரிய வெடிகுண்டு உபகரண தொகுதி தொடர்பாக தகவல்கள் தருபவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலிசார் அறிவித்துள்ளனர்.

யல கண்டெடுக்கப்பட்ட இத்தொகுதியில் வெடி குண்டு போல் பியரிங் வெடிமருந்துகள் மற்றும் பற்றரிகள், கம்பிகள் என்பன காணப்பட்டதாகவும் பொலிசார் கூறினர். இப் பொருள்கள் எங்கிருந்து எவரால் எப்படி கொண்டுவரப்பட்டன. எங்கு பொருத்தப்பட்டன என்பது குறித்து அறிய உதவு தகவல்களை தருபவர்களுக்கே ...க... ...பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## மன்னார் மேலதிக அரசாங்க அதிபர்

## மட்டு ராணுவ முகாமில் பெண்களுக்குகடும் சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவ முகாம் ஒன்றில் பெண்கள் தனியே அழைக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப் படுகின்றனர்.

சித்தாண்டி ஆற்றுப் பகுதியை அண்டிய இராணுவ முகாமிலேயே இவ்வாறு நிகழ்கிறது

இக் கிராம வாசிகள் இம் முகாமை தாண்டியே வயலுக்கும் மீன் பிடிப்பதற்கும் விறகு எடுப்பதற்கும் சென்று வருகின்றனர்.

இராணுவத்தின் இப் புதிய சோதனையை அடுத்து அச்சம் கொண்ட பெண்கள் மேற்படி முகாம்பகுதியிலமைந்துள்ள வீதியில் செல்வதை குறைத்துக்கொண்டுள்ளனர்.

## நெற்செய்கையில் ஈடுபட சிறிலங்கா படையினர் தடை

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டி ஆற்றுக்கு மேல் ஒரு மைல் வ்ஸ்தீரணத்திற்குள்ளேயே விவசாயிகள் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடமுடியும் என இராணுவம் அறிவித்துள்ளது.

இப் பகுதியில் பெருமளவில் வயல் காணிகள் அமைந்துள்ள போதிலும் படையினர் அறிவிப்பை அடுத்து குறிப்பிட்ட அளவிலேயே வேளாண்மையில் ஈடுபடமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

## விடுதலைப்புலிகளை தேடிய படையினை கரடி தாக்கியது

(கொழும்பு)

திருமலை பொலநறுவை காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்களை தேடும் நோக்கில் சென்ற இராணுவ அணியினரில் மூவர் கரடி ஒன்றின் தாக்குதலுக்கு இலக்காகினர். கரடியின் தாக்குதலில் படுகாயமடைந்த இம் மூன்று படையினரும் சிகிச்சைக்காக பொலநறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

## அகதிமுகாம் மூடத்திட்டம்

(மட்டக்களப்பு)

காரைதீவு அகதி முகாம் டிசம்பரில் மூடப்படும் என்று காரைதீவு பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த அகதி முகாமில் அம்பாறையைச் சேர்ந்த தமிழர்கள் 1990 ஆம் ஆண்டுப் பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர்.

## 40 மாதங்கள் நிவாரணமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை எல்லைக் கிராமங்களிலிருந்து 90ஆம் ஆண்டு இடம்பெயர்ந்கு சென்று அம்பாறை மாவசித்து... இரு பகுதிகளி...

(4ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

திருமலை பொலநறுவை காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்களை தேடும் நோக்கில் சென்ற இராணுவ அணியினரில் மூவர் கரடி ஒன்றின் தாக்குதலுக்கு இலக்காகினர். கரடியின் தாக்குதலில் படுகாயமடைந்த இம் மூன்று படையினரும் சிகிச்சைக்காக பொலநறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

...டுத்துள்ளதைத் தொடர்ந்தே அங்கு பதற்ற நிலை அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

கொழும்பில் சில தினங்களுக்குமுன் ஆறு தமிழ் இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

வீதியில் சென்ற இளைஞர்கள் மீது சந்தேகத்தின் பேரில் பொலிசார் சோதனை நடத்தியதிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பிரிவைச் சேர்ந்த மூவர் அண்மையில் கொழும்பிறகு வந்திருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தகவலை அடுத்து கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் பாதுகாப்பு அதிகரித்துள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார் என்றுள்ளது.

கடந்தவாரம் முகத்துவாரம் பகுதியில் கைது செய்யப்பட்ட 30 தமிழ் இளைஞர்களில் ஒருவராவது தற்கொலைப் படையைச் சேர்ந்தவராக இருக்கலாம் என பொலிசார் சந்தேகிப்பதாக முன்னர் அறிவித்திருந்தது.

மேலும் அப்பகுதியில் தற்கொலைப் படையாளி அணியும் அங்கியொன்று வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே

## தகவல் கொடுப்போருக்கு 5 இலட்சம் சன்மானமாம்

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் பகுதியில கடந்தவியாழனன்று கண்டெடுக்கப்பட்ட தற்கொலைப்படை வீரர் ஒருவர் பயன்படுத்துவதற்குரிய வெடிகுண்டு உபகரண தொகுதி தொடர்பாக தகவல்கள் தருபவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலிசார் அறிவித்துள்ளனர்.

யல கண்டெடுக்கப்பட்ட இத் தொகுதியில் வெடிகுண்டு போல் ப்யரிங் வெடிமருந்துகள் மற்றும் பற்றரிகள், கம்பிகள் என்பன காணப்பட்டதாகவும் பொலிசார் கூறினர். இப் பொருள்கள் எங்கிருந்து எவரால் எப்படி கொண்டு வரப்பட்டன. எங்கு பொருத்தப்பட்டன என்பது குறித்து அறிய உதவு தகவல்களை தருபவர்களுக்கே ...சன்மானம் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## அகதிமுகாம் மூடத்திட்டம்

(மட்டக்களப்பு)

காரைதீவு அகதி முகாம் டிசம்பரில் மூடப்படும் என்று காரைதீவு பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார்.


இந்த அகதி முகாமில் அம்பாறையைச் சேர்ந்த தமிழர்கள் 1990 ஆம் ஆண்டுப் பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர்.

## 40 மாதங்கள் நிவாரணமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை எல்லைக் கிராமங்களிலிருந்து 90ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்று அம்பாறை மாவட்டத்தில் இரு பகுதியில்...

(4ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ விடுதலைப் போரில் தன்னுயிர்ஈந்த முதற் பெண் போராளி 2-ம் லெப். மாலதியின் நினைவாக நேற்று கோப்பாயில இடம்பெற்ற நிகழ்ச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஈகைச்சுடர் ஏற்றுவதையும யாழ. மாவட்ட மகளிர அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வியையும் படதில் காணலாம.

# விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த முதற் பெண் போராளிக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவு அடைந்த முதற் பெண் போராளி 2ஆம் லெப். மாலதியின் ஆறாம் ஆண்டு நினைவு தின நிகழ்ச்சிகள் வட தமிழீழத்தில் சகல பகுதிகளிலும் அனுஷ்டிக்கப் பட்டது.

நேற்று மாலை நான்கு மணிக்கு கோப்பாய் வெளியில் 2ஆம் லெப். மாலதி வீரச்சாவு அடைந்த இடத்தில் அமைந்துள்ள நினைவு தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தேசியக் கொடியை மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா ஏற்றிவைத்தார். ஈகைச்சுடரை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் ஏற்றிவைத்தார். நினைவு தூபிக்கு விடுதலைப் புலிகள் உறுப்பினர் தேவர் மாலை அணிவித்தார்.

கோப்பாய் சந்தியில் அமைக்கப்பட்ட 2ஆம் லெப். மாலதியின் உருவப் படம் நேற்று திரைநீக்கம் செய்யப்பட்டது, தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் உருவப்படத்தை திரை நீக்கம் செய்துவைத்தார். ஈகைச்சுடரை வன்னி தொடர்பக பொறுப்பாளர் வாகீசன் ஏற்றிவைத்தார். உருவப் படத்திற்கு மன்னார் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கணேஷ் மலர் மாலை அணிவித்தார். இந்நிகழ்ச்சிகளில் தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன், தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன். தியாகம், செஞ்சோலை பொறுப்பாளர் செல்வி ஜனனி தமிழீழ மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி, மகளிர் படை மருத்துவதுறை பொறுப்பாளர் செல்வி ஜெனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மாலை 6.00 மணியளவில் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி

(4ஆம் பக்கம் பார்க்க)

## 2-ம் லெப். மாலதி நினைவாக குடியிருப்பு நேற்று திறப்பு

2ஆம் லெப். மாலதி நினைவாக மானிப்பாயில் மாதிரி குடியிருப்பு நேற்று மாலை 4 மணிக்கு திறந்துவைக்கப் பட்டது. ஈகைச்சுடரை மகளிர் அமைப்பின் சண்டிலிப்பாய் வட்ட பொறுப்பாளர் செல்வி நற்குணம் ஏற்றிவைத்தார். அகதிகள் புனர்வாழ்வு உப தலைவர் நல்லதம்பி குடியிருப்பை திறந்துவைத்து குடியிருப்பாளர்களுக்கு திறப்புகளை வழங்கினார்.

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் இக்குடியிருப்பில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 26வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

## புக்காரா நோட்டம்

(வடமராட்சி)

தொண்டமனாறு குடியிருப்புப் பகுதிகளை 'புக்காரா' விமானம் ஒன்று நேற்றுகாலை 9 45 மணியளவில் பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டது.

நேற்று முன்தினமும் காலை தொடர்ச்சியாக பல தடவைகள் இவ்விமானம் வட்டமிட்டது. (யோ)

## சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

பனாகொட இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரபால என்ற சிப்பாய் தனக்கு வழங்கப்பட்டிருந்த ரி-56 ரைபிளால் தன்னைச் சுட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## வாந்திபேதி நோயாளர் ஏழு பேர் நேற்று அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் வாந்திபேதி நோயினால் பாதிப்படைந்த ஏழு பேர் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தஇருவாரங்களுக்குமுன்னர் வேகமாக பரவிய வாந்திபேதி நோய் ஒரு கட்டத்தில் வெகுவாக குறைந்து சென்றபோதும் தற்போது வேகமாக அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி) (பா)

## மன்னார் மேலதிக அரசாங்க அதிபர்

# கடல்வலய சட்டத்தை தளர்த்த கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்ட மீனவர்கள் கடல் வலய தடைச் சட்டத்தினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். அவர்களின் வறுமையைப் போக்க உதவ வேண்டும் என மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் சிறிலங்கா அரசிடம் கேட்டுள்ளார்.

மன்னார் மீனவர்கள் உணவுப் பஞ்சத்தால் வாடுவதால் கடல் எல்லைக்குள் மூன்று மைல் தூரம் இயந்திரப்படகில் சென்று மீன்பிடித்து வர அனுமதிக்க வேண்டும் என்றும், இல்லாது போனால் மீனவர்களின் கஷ்டத்தைப் போக்க உலர்உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும் கரைவலை தொழிலில் ஈடுபடுவதற்கு இராணுவம் அனுமதி வழங்கவேண்டும் என்றும்,

மீளக் குடியேற்றப்பட்ட மக்களுக்கு உலர்உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதால் இந்த மக்கள் பாதிப்படைந்துள்ளனர். இதனையும் கவனத்திற் கொள்ள வேண்டும் என்றும் மேலதிக அரசாங்க அதிபர் சிறிலங்கா அரசிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

## ஷெல் வீச்சு மத்தியிலும் படகு சேவை நடைபெற்றது

ஆனையிறவு பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கிளாலி நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து தடைப்பட்டிருந்த கிளாலி-பூநகரி படகுச்சேவை நேற்று மீண்டும்ஆரம்பமானது தெரிந்ததே

இதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று கிளாலியூடாக தமது பயணத்தை மேற்கொள்ள காத்திருந்த போதே மாலை 7. 30 மணியளவில் வந்த உலங்குவானூர்தி ஒன்று கடலிலும் தரையிலும் தொடர்ச்சியான கலிபர் தாக்குதலை கடலிலும் தரையிலும் மேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து ஆனையிறவு பகுதியிலிருந்து கிளாலி நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதல் நள்ளிரவு வரை

(04ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி பகுதியில் மிதிவெடி ஒருவர் காலை இழந்தார்

கிளாலி கடற்கரைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் வைத்தமிதிவெடியொன்று வெடித்ததில் ஒருவர் காலை இழந்தார். இருவர் காயம் அடைந்தனர். நேற்று பிற்பகல் 2 35 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் உடுவிலைச் சேர்ந்த கந்தையா சிவஞானம் [வயது 30] என்பவர் காலை இழந்தார். மேலும் உடுவிலைச் சேர்ந்த சிமித்வில்சன் [வயது 25], கொட்டடியைச் சேர்ந்த சண்முகராசா கனகராசா [வயது 25] என்பவர்கள் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்

மேலும் அல்லிப்பளைக்கும் கிளாலிக்கும் இடையேயான கடற்கரையோரத்தில் மற்றொரு மிதிவெடி வெடித்தது என தெரியவருகிறது இதில் சேதவிபரம் தெரியவரவில்லை

இதேவேளை நேற்று இரவு 7-30 மணியளவில் கிளாலிப் பகுதியில் உலங்கு வானூர்தியொன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது (86), (நி), (பா)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

8 1/2 பரப்பு வீடுவளவு விற்பனைக்குண்டு (அச்சுக்கூட ஒழுங்கை கொக்குவில்) தொடர்பு: இல. 80, பழம் றோட், கந்தர்மடம். (6250)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சியில் நடந்த வன்செயல்கள் காரணமாக இடை நிறுத்தப்பட்ட எமது சேவை தொடர்ந்து மீண்டும் இயங்கிக் கொண்டு இருக்கின்றதுஎன்பதைவாடிக்கையாளர் கட்கு அறியத் தருகின்றோம். தங்கள் ஆதரவிற்கு நன்றி. டில்காவர்ச் அன்ட் றேடியோ வேக்ஸ். கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7569)

### லலிதா சகஸ்ரநாமம்

லலிதா சகஸ்ரநாமம்(கிரந்த லிபி)வெளிவந்துள்ளது. சுப்பிரமண்யசகஸ்ரநாமமும் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்க. சோ. நிர்மலேஸ்வர சர்மா முருகமூர்த்தி கோவில், நவாலி. (சி/7545)

### "சக்தி" இயற்கைப் பசளை

கூட்டெரு முறையில் தயாரிக்கப்படுவது, தோட்டப் பயிர்களுக்கு ஊட்டம் தருவது. குறைந்த விலை, நிறைந்த விளைச்சல். பக்கற் விலை ரூபா 9 -. 25 பக்கற் கொண்ட பெட்டி ரூபா 200 -. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்கப்படுகிறது. ''மில்க்வைற்' (சி-7559)

### "கொழும்பில் கல்யாணம்"

இந்து மகளிர் கல்லூரி பொன்விழாவில் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'கொழும்பில் கல்யாணம்' நாடகத்தை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம் பிள்ளை, 30/- (6210)


## விவசாய பயிற்சி ஆரம்பம்

யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ள ஒன்பது மாதகால விவசாயப் பயிற்சி நெறி இன்று ஆரம்பமாகவுள்ளது.


## 1-ம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### தம்பையா அருளானந்தம்

(முன்னாள் இ. போ. ச. சாரதி)

தோற்றம் 07 02-1936 — மறைவு 22-09-1992

திதி: 11-10-1993

எங்கள் அன்புத்தெய்வமே பண்பின் சிகரமே
குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்தீரே!
ஈடு செய்ய முடியாத உங்கள் பேரிழப்பை
நம்ப மனம் மறுக்கின்றது
எத்தனை யுகம் சென்றாலும் அப்பா உங்கள்
பிரிவை ஆற்ற முடியாது
மீண்டும் வரமாட்டீர்களா என்று மனம் ஏங்குகிறது
மரம் சாய்ந்தால் கிளைகள் தளிர்க்க முடியுமா?
அப்பா உங்கள் அன்பையும் அரவணைப்பையும்
இனி எங்கு காண்போம்
உங்கள் பிரிவால் சிந்தும் கண்ணீரையே
காணிக்கையாக்குகின்றோம்.

இன்று (11 10 93) எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அழைக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

மட்டுவில் வடக்கு,
5-ம் கட்டை,
சாவகச்சேரி.

(சி/7563)


## தமிழ்க் குழுக்களின் கோரிக்கை அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது

### பிக்கு பெரமுன வலியுறுத்து

பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு தமது மூன்று கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் வலியுறுத்துகின்றன. இவை ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகளாகும் எனவே அரசாங்கமோ ஜனாதிபதியோ இந்த நிபந்தனைகள் விதிக்கும் கட்சிகளுடனோ குழுக்களுடனோ பேச்சு வார்த்தையில் ஈடுபடக் கூடாது.

இவ்வாறு ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் றுகுணரட்ட பிக்கு பெரமுன எனும் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்த நிபந்தனைகளை ஒத்துக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் தயாராக உள்ளதா? அல்லது இதனை நிராகரிக்கவுள்ளதா என்பதே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீள உருவாக்கும் கட்டமைப்பு நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதா என்ற இரண்டு கேள்விகளுக்குமுள்ள பதில்களையே அரசாங்கத்திடமும் ஜனாதிபதியிடமும் மக்கள் இன்று எதிர்பார்க்கின்றனர் என்று பிக்கு பெரமுன மேலும் தெரிவித்துள்ளது.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நாடு இப்போது இனப்பிரச்சினையை எதிர்கொள்ளவில்லை. பயங்கரவாதப் பிரச்சினையையே எதிர்கொள்கிறது என தாங்கள் குறிப்பிட்டுள்ளதை திருப்தியுடன் நாம் கவனத்தில் எடுத்துள்ளோம்.

விடுதலைப்புலிகள் தந்திரோபாயத்தின் மூலம் இந்த நாட்டின் பெரும் பகுதியை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து செயலிழக்கச் செய்துள்ளனர்

சகல விதத்திலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீளக்கொண்டு வருவதே அரசின் வெளிப்படையான அரசியல் மற்றும் அரசியலமைப்பின் கடமையாகும்.

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டபின்னர் அவரைக் கொன்றவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்ட விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைஒன்றைமேற்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாக நீங்கள் அறிக்கை ஒன்றில் கூறியிருந்தீர்கள். பிரதமரும் இதே போன்று அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்,

பேச்சு வார்த்தை நடத்த முடியாத இந்தக்கோரிக்கைகளை தமிழ்க்கட்சிகள் மீண்டும் மீண்டும் கோரி வருகின்றன என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை இடைநிறுத்தம்

சனசமூக நிலையங்களுக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வருடாவருடம் வழங்கப்படும் நன்கொடைப்பணம், வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனை இடைநிறுத்தம் செய்யாமல் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரும் கடிதம் ஒன்றை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் யா. மாவட்ட பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரூடாகதிருகோணமலையில் இயங்கிவரும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இப்படியான நிதி நன்கொடை நிறுத்தல் நடவடிக்கையானது சேவையில் ஈடுபட்டுள்ள சனசமூக நிலையங்களுக்கு ஒரு பெருந் தடையாக அமையும் என்றும் நன்கொடைப் பணத்தை ரூபா 2500/ ஆக உயர்த்தி வழங்குமாறும் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் இக்கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது. (17)

மண்ணெய் கொண்டு வருவதற்கான

## கப்பற் கட்டணத்தை ஏற்க அரசிடம் கோரிக்கை

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட பல நோ. கூ. சங்கங்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வருகின்ற மண்ணெண்ணெய்க்கான கப்பற் கட்டணத்தை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என யாழ். அரச அதிபர் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

மேற்படி விடயம் தொடர்பான செய்தி ஒன்றை யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்குஅனுப்பி வைத்துள்ளார்.

மேலும் யாழ் அரச அதிபர் இவ் விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் மண்ணெண்ணை பரல் இல்லை என்றுஅரசாங்கம் யாழ்மாவட்டத்திற்கு மண்ணெண்ணெய் அனுப்பாமல் இழுத்தடிக்கின்றது ஆனால்மண்ணெண்ணெய் பரல் பெற்றுத்தருகின்ற பல நோ. கூ. சங்கங்களிற்கு தாம் மண்ணெண்ணெய் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்வதாகவும் பலநோக்குச் கூ. சங்கங்களின் கப்பல்கட்டணம்இன்றி மண்ணெண்ணெய் பெற்றுத்தருவதான தனக்கு கையளிக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக இம் முறை தான் கொழும்பு சென்றதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கதைப்பதாகவும் தெரிவித்தார்.

## ஆங்கிலபாடப் போதனைக்கு ஓய்வு பெற்றவர் விண்ணப்பிக்கவும்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கில பாடத்தினைப் போதிப்பதற்கு ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும், ஆங்கிலத் தேர்ச்சி பெற்ற ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களையும் விண்ணப்பிக்கும்படி கல்வி, உயர்கல்வி கலாசார விவகார அமைச்சு அறிவித்துள்ளது. இவ் விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி அக்டோபர் 15ம் திகதியாகும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவு செய்வார் என்றும், விண்ணப்பதாரி தனது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களை அனுப்புமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது

காலபோக நெற்செய்கை ஆரம்பித்திருப்பதினால் கட்டாக்காலி ஆடு, மாடுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொதுமக்கள் தங்கள் ஆடு மாடுகளை கட்டி வளர்க்க வேண்டும் என வலிமேற்கு பிரதேச செயலரும், சங்கானை உதவி அரசாங்க அதிபருமான செல்வி ரூபிணி கனகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார் காலபோக நெற்செய்கையினை விவசாயிகள் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் கட்டாக்காலி கால்நடைகளினால் விவசாயிகளுக்கும், உணவு உற்பத்தி பயிர்களுக்கும் பெருத்த அழிவுகள் ஏற்படாமல் முன் நடவடிக்கையாக மேற்படி கால்நடைகளின் சொந்தக்காரர்கள் கவனத்தில் கொள்ளுமாறும், கால்நடைகளை கட்டி வளர்க்காத சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார். (41)

## விடைத்தாள் திருத்தும்பணி

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணிகள் இம்மாதம் 14-ம் திகதிமுதல் 21-ம் திகதிவரை நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு பாடங்களுக்கும் பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். இப்பணியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் அவரவரது பாடசாலை முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## போர்க்கால கருத்தரங்கு

குருநகர் தொடர்மாடி மைதானத்தில் நாவாந்துறை பிரதேசப்பொறுப்பாளர் திரு. மதிவாணன் தலைமையில் கடந்த வெள்ளி போர்க்கால கருத்தரங்கொன்று நடைபெற்றது.

இப்போர்க்கால கருத்தரங்கில் யாழ்மாவட்ட மாவீரர்


வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

## நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்




## நினைவு கூருகின்றோம்...

1993-10-11

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில்

## "கொழும்பில் கல்யாணம்"

இந்து மகளிர் கல்லூரி பொன்விழாவில் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'கொழும்பில் கல்யாணம்' நாடகத்தை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் முதலாம் பிள்ளை, 30/- (6210)

## விவசாய பயிற்சி ஆரம்பம்

யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு [illegible] நடாத்தப்படவுள்ள ஒன்பது மாதகால விவசாயப் பயிற்சி நெறி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கென தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று காலை 8-30 மணிக்கு திருநெல்வேலி மாவட்டவிவசாயப்பயிற்சி நிலையத்திற்குதவறாதுசமுகம் கொடுக்கும் படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பட்டுவில் வடக்கு,
5-ம் கட்டை,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

(சி/7563)

## போர்க்கால கருத்தரங்கு

குருநகர் தொடர்மாடி மைதானத்தில் நாவாந்துறை பிரதேசப்பொறுப்பாளர் திரு. மதிவாணன் தலைமையில் கடந்த வெள்ளி போர்க்கால கருத்தரங்கொன்று நடைபெற்றது.

இப்போர்க்கால கருத்தரங்கில் யாழ்மாவட்ட மாவீரர் பணிமனை மகளிர் பொறுப்பாளர் செல்வி பூரணி மற்றும் கடற்புலிகளின் உறுப்பினர் வாஞ்சிநாதன் ஆகியோர் உரைநிகழ்த்தினர் அதனைத்தொடர்ந்து ஒலிவீச்சும் காண்பிக்கப்பட்டது.

[illegible] பட்டுள்ளதாகவும் இதனை இடைநிறுத்தம் செய்யாமல் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரும் கடிதம் ஒன்றை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் யா. மாவட்ட பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருடாகதிருகோண[illegible] டுள்ள சனசமூக நிலையங்களுக்கு ஒரு பெருந் தடையாக அமையும் என்றும் நன்கொடைப் பணத்தை ரூபா 2500/ ஆக உயர்த்தி வழங்குமாறும் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் இக்கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது. (17)

[illegible] வேண்டும் என வலியுறுத்தி பிரதேச செயலரும், சங்கானை உதவி அரசாங்க அதிபருமான செல்வி ரூபிணி கனகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார் காலபோக நெற்செய்கையினை விவசாயிகள் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் கட்டாக்காலி கால்நடைகளினால் விவசாயிகளுக்கும், உணவு உற்பத்தி பயிர்களுக்கும் பெருத்த அழிவுகள் ஏற்படாமல் முன் நடவடிக்கையாக மேற்படி கால்நடைகளின் சொந்[illegible]


[illegible]

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணிகள் இம்மாதம் 14-ம் திகதிமுதல் 21-ம் திகதிவரை நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு பாடங்களுக்கும் பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். இப்பணியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் அவரவரது பாடசாலை மூகவரிகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

## நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்



**இடம்: சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் காலம்: 16.10.93 நேரம்: இரவு 6.00 மணி**

### நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" முதல்முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது

(அ) நெருப்பு புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்.
(ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்தல்.
(உ) 35கிலோஎடையுள்ளஇரும்புக்குண்டினை 7அடிஉயரத்திலிருந்து வயிற்றில்ஏந்துதல்.
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
(எ) (3'' 200 ஆணி) அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்க வைத்து மார்பு மேலாக பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
(ஏ) துரைரெத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

2. மோகன்மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டிவிளையாட்டுக்கள்.
3 கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

### டிக்கெற் கிடைக்குமிடம்

| | |
|---|---|
| "வெஸ்கோ" | ஆஸ்பத்திரி வீதி, யாழ். |
| "குறிஞ்சி" | திருநெல்வேலி சந்தை |
| "நாதன் மருந்தகம்" | கல்வியங்காடு |
| "தாவடி மெடிக்கல்ஸ்" | கோண்டாவில் |
| "மெடி இஸ் குயர்ஸ்" | மானிப்பாய் |
| "மெடிப் பிளஸ்" | சங்கானை |
| ஸ்ரீமுருகன்நெல்லியடி - | பருத்தித்துறை |
| "அம்பாள் பாமசி" | சாவகச்சேரி |

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
முக்கியகுறிப்பு: யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியை தவிர்க்க முடியாத காரணத்தினால் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

நன்றி.

(சி/7532)

வ. யா. ஆ. ம. வ. சங்கம்

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-11

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - பாவற்கொடிச்சேனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**மாணிக்கம் ( - )**

1987ஆம் ஆண்டு யாழ் - தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**விஷ்ணு** (சுப்பையா விஷ்ணுமோகன் - மட்டுவில், சாவகச்சேரி - யாழ்)

யாழ் - மூளாயில் பொன்னாலை முகாம் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். குணம்** (செபஸ்தியாம்பிள்ளை கமலன் ரவிச்சந்திரன் - விடத்தல்தீவு - மன்னார்)

இந்தியப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் பலியான நாட்டுப்பற்றாளரான யாழ் பெரியபுலம் மகாவித்தியாலய ஆசிரியர்,

**ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை**

மூளாய் - காளிகோவிலடி, கோப்பாய் பகுதிகளில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 02 தமிழர்கள்.

இந்தியப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஆதரவாளரான-

**நவநீதி/வின்சன்** (திருநாவுக்கரசு சுரேஸ்குமார் - கருகம்பனை, காங்கேசன்துறை)

1988ஆம் ஆண்டு அம்பாறை - பாண்டிருப்புப் பகுதியில் இந்தியப்படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

**அன்பு** (இராசநாயகம் ஜெயரத்தினம் - பாண்டிருப்பு - கல்முனை)

திருமலையில் இந்தியப்படையினரால் பாதுகாப்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

வவுனியா- ஈரப்பெரியகுளம் பகுதியில் வவுனியா அனுராதபுரம் பேருந்திலிருந்து சிறிலங்கா படையினரால் இறக்கப்பட்டு காட்டுக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட 5 தமிழ் பயணிகள்.

1989ஆம் ஆண்டு கரணவாய் - மண்டான் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். விஜயன்** (நடனசிகாமணி விஸ்வராஜ் தெனியம்பை - வல்வெட்டித்துறை)

1990ஆம் ஆண்டு மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஏறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சுதாகர் ( - - )**

**கெஞ்சன்** (வடிவேலு சிறிகுமார் - முல்லைத்தீவு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7573]

## இலங்கை வங்கியின்

## விவசாயக்கடன் திட்டம் நடைமுறையில் புதிய சிக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இலங்கை வங்கியின் விவசாயக் கடன் திட்டத்தை அமுல்படுத்துவதில் புதிய இழுபறி நிலை உருவாகியுள்ளது.

இவ்வாண்டுக்கான பெரும்போக விவசாயச் செய்கைக்காக கடன் வழங்குவதற்கு இலங்கை வங்கி தீர்மானித்தது. அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் இக்கடன் திட்டத்தை உரிய காலத்தில் அமுல்படுத்துவதில் தற்பொழுது புதிய சிக்கல்கள் உருவாகியுள்ளது.

கடன் கோரி விண்ணப்பிக்கும் விவசாயிகளது விண்ணப்பப்படிவங்களை கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது. இவ்வாறு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களை கொழும்பு தலைமை அலுவலக அதிகாரிகள் பரிசீலனை செய்தபின்னரே கடன் வழங்க முடியும் என்று கொழும்பு அதிகாரிகள் கூறிவிட்டனர்.

இச் செயற்பாடு உடனடியாக சாத்தியப்படும் விடயமாக இல்லையென்று யாழ். இலங்கை வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் மேற்படி நடைமுறைப்படி கடன் வழங்குவதாக இருந்தால் இவ்வாண்டுக்கான பெரும்போக விவசாயச் செய்கை முற்றுப்பெற்றபின்னரே கடன் தொகை விவசாயிகளின் கைகளைச் சென்றடையும் அவல நிலை தோன்றும் என்றும் இவ் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் இவ்வாறான இழுபறி நிலை காரணமாக மேற்படி விவசாயக்கடன் திட்டம் உடனடியாக உரிய காலத்தில் நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (க)(நி)

## முகாமைத்துவ பரீட்சை ஒரு வாரம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

முகாமைத்துவ சேவையாளர் பரீட்சை இம் மாதம் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருந்த முகாமைத்துவ சேவையாளர் பரீட்சை 23 ஆம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

16 ஆம் திகதி சனிக்கிழமை இலங்கை நிர்வாக சேவைக்கான பரீட்சையும் நடைபெறவுள்ளதால் பரீட்சார்த்திகள் வசதி கருதி முகாமைத்துவ சேவை பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

**சிந்தனைக்கு**

இரவிலும், பகலிலும் கனவு காண்பவர்கள் அறிவிலிகள்.

– எமல்ஷியர் தெஸாந் தக்குருஸ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 11-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## கனவு கலைந்தது

கிளாலியில் இருந்து இராணுவம் வெளியேறியமை கண்டு பௌத்த சிங்கள கடும்போக்காளர்கள் கொதித்துப் போயுள்ளனர். இது குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் பேரினவாதப் பத்திரிகைகளும் அரசு மீது பெரும் கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றன. இது டி.பி. விஜேதுங்கா அரசிற்கு பல சங்கடங்களையும் உருவாக்கியுள்ளது.

கிளாலியில் இருந்து இராணுவம் பின் வாங்கியமை குறித்து பௌத்த சிங்கள கடும் போக்காளர்கள் கொதித்துப் போயுள்ளதில் நியாயம் இல்லாமல் இல்லை. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பல இராணுவ தோல்விகளை சந்தித்து மனவிரக்தியுற்ற நிலையில் இருந்த இவர்களுக்கு யாழ். தேவி இராணுவ நடவடிக்கை ஆரம்பத்தில் பெரும் தென்பூட்டும் ஒன்றாகவே இருந்தது

முதலில் இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சினை தான் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா அறிவித்த போது அவர்களுக்கு பேருவகை ஏற்பட்டது தங்களுக்கேற்ற தொரு தலைவன் வழிகாட்டி கிடைத்துவிட்டான் என்றே அவர்கள் எண்ணிக் கொண்டனர். அதைத் தொடர்ந்து இராணுவ கட்டமைப்பில் செய்யப்பட்ட மாற்றம் போருக்கு அரசு வெளிப்படையாகவே தயாராகி வருகிறது என்பதை அவர்களுக்கு உணர்த்தியது. இதனால் அவர்கள் பூரித்துப் போயினர்.

இந்நிலையில் 'ஒப்பரேசன் யாழ்தேவி' ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் இரகசியமாக திட்டமிடப்பட்ட இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னரே மிகப்பெரிய தென்பதும் அதன் பயணம் நீண்டதென்ற செய்தியும் வெளிவந்தது அப்பொழுது பேரினவாதிகள், இராணுவம் விடுதலைப் புலிகளையும், தமிழ்மக்களையும் ஒழித்துக்கட்டும் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டதாகவே கருதினர்,

இதற்கு ஏற்ற மாதிரியே பேரினவாதப் பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டன. ஆனையிறவில் இருந்து புறப்பட்ட இராணுவம் கிளாலியைக் கைப்பற்றி விட்டதாகவும் சாவகச்சேரியை நோக்கி முன்னேறி வருவதாகவும் புலிகள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டதாகவும் புலிகளின் இராணுவ தளபாடவளங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டதாகவும் அவை தெரிவித்தன. கிளாலி முற்றுகையின் மூலம் புலிகளின் நடமாட்டம் முடக்கப்பட்டு விட்டதாகவும் புலிகளின் இறுதிக்காலம் நெருங்கி விட்டதாகவும் அவை வீரம் பேசின.

# பாரிய தாக்குதல் நடாத்த எதிரி திட்டமிடுகிறான்

**-பரா தெரிவிப்பு**

''எதிரியானவன் மிக விரைவில் பயங்கரமான மும்முனைத் தாக்குதல் ஒன்றை நடாத்தி எம்மை அடிமைப் படுத்த-எம்மினத்தை அழித்து ஒழிக்க முற்படுகின்றான். இறுதித் தாக்குதலாகக் கொண்டு மிகப் பயங்கரமான தாக்குதலை நடாத்தத் திட்டமிட்டுள்ள இராணுவத்தினரை எதிர்கொண்டுஎமது மக்களை-மண்ணைக் காப்பாற்ற வேண்டியது எமது பெரும் பொறுப்பாக அமைகின்றது. எனவே கல்விச் செல்வத்தை சிறப்புடன் வழங்கிவரும் அதிபர்களாகிய நீங்களும் இன்றைய போர்க்காலச் சூழ்நிலையை நன்றாக உணர்ந்து செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்''.

வலிகாமம் மேற்குப்பிரதேச பாடசாலைகளின் அதிபர்களுக்கான ''போர்க்காலக் கருத்தரங்கு'' ஒன்றில் தமிழீழ நீதி நிர்வாகத்துறை பொறுப்பாளர் திரு. பரா கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.

இக் கருத்தரங்கு வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரியில் வட்டுக்கோட்டை கொத்தணி பிரதி அதிபர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு பரா தொடர்ந்து உரையாற்றும்போது, ''விரைவில் நடைபெறவுள்ள தாக்குதலானது இதுவரை தமிழீழத்தில் நடைபெறாத அளவுக்கு மிகப்பாரிய தாக்குதலாகவே இருக்கும். இத் தாக்குதலுக்கு எதிர் கொள்ள போராளிகள் தொகை மிகக் குறைவாகவே இருக்கின்றது. இளம் சமுதாயத்தினர் இன்றைய பயங்கரமான நிலையினை நன்றாக உணர்ந்து போராட்டத்தில் ஈடுபட முன்வரவேண்டும். வீட்டுக்கு ஒருவரையாகுதல் அனுப்பிவைத்து போராட்டத்தில் வெற்றிபெற உதவவேண்டும்'' என்றார்

வலிமேற்குப்பிரிவு அதிபர்கள் இக் கருத்தரங்கில் பெருந்தொகையாகக் கலந்து கொண்டனர்.

# ரஷ்ய அதிபரின் யோசனைக்கு 23 பிராந்தியங்கள் எதிர்ப்பு

(மாஸ்கோ)

பிராந்திய சபைகள் அனைத்தையும் கலைத்து விடும்படி ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் தெரிவித்த யோசனையை ஏற்றுக்கொள்ள இருபத்து மூன்று பிராந்திய சபைகள் மறுப்பு தெரிவித்துவிட்டன.

பாராளுமன்றத்தின் பல உறுப்பினர்களை தமக்கு எதிராகச் செயற்படுவதற்கு தூண்டிவிட்டதில் பிராந்திய சபைகள் மறைமுகமாக பங்காற்றியுள்ளன எனக் கூறியிருக்கும் அதிபர் யெல்ட்சின் இப்பிராந்திய சபைகளைக் கலைக்கும்படி தொலைக்காட்சி மூலம் உரையாற்றுகையில் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே

இதேவேளை பாராளுமன்றத்தின் ஐந்து முக்கிய உறுப்பினர்களைக் கைது செய்யும்படி மாஸ்கோவில் வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## அரசியல் நீதிமன்ற செயல்பாடு ரஷ்ய அதிபர் இடைநிறுத்தம்

[மாஸ்கோ]

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் தமது நாட்டில் அரசியல் சாசன நீதிமன்றம் செயற்படுவதை இடைநிறுத்தி வைத்துள்ளார். அத்துடன் மாஸ்கோ நகரசபை உட்பட தலைநகரத்திலுள்ள பல்வேறு பிராந்திய சபைகளையும் கலைத்திருப்பதன் மூலம் ரஷ்ய அதிகாரத்தின் மீதான தமது கட்டுப்பாட்டை மேலும் இறுக்கமாக்கியுள்ளார்.

நீதிமன்றத்தின் செயற்பாடுகள் யாவும் பாராளுமன்றத்திற்கான புதிய தேர்தல்கள் நடைபெறும்வரை இடைநிறுத்தி வைத்திருப்பதாக அதிபர் பொறிஸ் யெல்ட்சின் அதிபர் ஆணையொன்றின் மூலம் பிரகடனம் செய்துள்ளார். பிராந்திய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேர்தல்கள் நடத்துவதற்குப் பதிலாக அப்பதவிகள் இனிமேல் அதிபரின் நியமனம் மூலம் நிரப்பப்படும் எனவும் அதிபர் பொறிஸ் யெல்ட்சின் அறிவித்துள்ளார்.

இதேவேளை யெல்ட்சினுக்கு விசுவாசமான துருப்புக்களால் சின்னாபின்னமாக்கப்பட்ட வெள்ளை மாளிகை என்னும் பாராளுமன்றக் கட்டட வளாகத்திலிருந்து மேலும் 49 சடலங்களை அதிகாரிகள் மீட்டெடுத்தனர்.

## சிரிய அமைச்சருடன் அமெரிக்க அதிபர் பேச்சு

அமெரிக்கா அதிபர் பில் கிளிண்டன் சிரியாவின் வெளியுறவு பாருக் அல்.சாராவை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். சிரியாவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்துவது தான் இச் சந்திப்பின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையே பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின் நடைபெற்ற முதலாவது உள் மட்டப் பேச்சு இது என்பதும், வெள்ளை மாளிகையின் வழமையான சம்பிர...

## கிரிக்கட்டிலிருந்து ஓய்வு சிறிகாந்த் அறிவிப்பு

(சென்னை)

இந்திய கிரிக்கட் அணியின் ...

... சுற்றுப் போட்டிகளிலும் விறுவிறுப்புடன் இவர் விளையாடி ...

## இனி போருக்கான சங்கு முழங்கட்டும்

தாயுனக்குத் தந்ததென்ன பாலா? இல்லைத்
தண்ணீரா? தமிழிச்சி முலையில் உந்தன்
வாயருந்திக் கொண்டதென்ன பாலா? அன்றி
வடித்தகஞ்சித் தண்ணீரா தமிழா! இன்னும்
பாயிலென்ன படுக்கையடா எதிரி எங்கள்
படலையிலே வந்திடவும், தெருவின் ஓரம்
நாயெனவே கிடப்பதற்கா பிறந்தாய், உந்தன்
நரம்பினிலே என்றுனக்கு வீரம் பாயும்?

விழிதிறந்து பாருந்தன் தாய்மண் இங்கே
வேதனையாற் துடிக்கிறது உலகின் மூத்த
மொழியிறந்து போகிறது எதிரி வானின்
மேகத்தில் மறைந்திருந்து வீசும் குண்டால்
அழிகிறதே திருநாடு விம்மி, விம்மி
அழுகிறதே அடதமிழா நீயேன் இங்கு
பழிசுமந்து வாழ்கின்றாய் எழும்பு, உன்னை
படுத்திருக்க வோடாவுன் அன்னை பெற்றாள்

வேலெடுத்து வாளெடுத்து பகைவர் அஞ்ச
வில்லெடுத்த பரம்பரையின் விழுதே! இன்று
காலெடுத்து நடப்பதற்கும் பயந்து நீயேன்
காற்செருப்பாய் வாழ்கின்றாய் தமிழன் என்ற
நாலெழுத்தைக் கேட்டவுடன் எதிரி மேனி
நடுநடுங்க வேண்டாமோ? தாயின் வீரப்
பாலருந்திக் கொண்டவனே! எழடா வந்த
பகைவனுக்குக் குழிவெட்டிப் புதைப்போம் வாடா

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

அது அவசர அழைப்பு.

கண்களைத் திறந்து பார்... குண்டு வீச்சு விமானங்கள். காதில் விழுவதெல்லாம் கவச வாகன இரைச்சல்கள். பீரங்கிப் படகிலிருந்து பீறிட்டு வரும் எறிகணைகள் ஆம்.. யுத்தத்தின் சத்தங்கள் உங்கள் வாசல் வரை வந்துவிட்டன.

நித்திரைக்காக எப்படி நீங்கள் நீட்டிப்படுக்கலாம்? அறுபதினாயிரம் தங்களின இளைஞர்களையே கொன்ற சிங்களப் படைகள் தங்கள் கோரப்பற்களில் குருதி வழிய இங்குவந்துள்ளனர்.

தென் தமிழீழத்தில் எங்கள் உடன்பிறப்புக்களை கொன்றொழித்த சிங்களப்படையினர் இரத்தம் வடியும் குத்தீட்டிகளுடன் உங்கள் வாசலுக்கு வரத்துடிக்கின்றனர்.
நீங்கள் எப்படித் தூங்கிக்கிடக்கலாம்?

இது விழிகள் சிவப்பேற விழித்துக்கொள்ளும் நேரம் குருதிக் கலன்கள் கொதிப்பேற வேண்டிய காலம்.

வீட்டுக்கொருவராயினும் நாட்டுக்காகப் போராட வரத் தவறின் பாட்டும் கூத்துடனும் எதிரி வந்து உங்கள் படலையைத் தட்டுவான்.

கண்ணுக்கெதிரே உங்கள் தாயை, தங்கையை, தம்பியை தள்ளாடும் உங்கள் பேரனை ஒருவரையும் மிச்சமின்றி ஒத்தியெடுப்பான்.

இன்னும் இனியும் கண்களை மூடிவிட்டு விழிகளை திறந்து பார்த்தால்.

உங்கள் கைகள் கட்டப்பட்டிருக்கும். உங்கள் தங்கை எல்லாம் இழந்து எதிரிலே.. கிடப்பாள்.

நீங்கள் குந்தியிருந்த குடியிருப்புக்கள் சின்னா பின்னமாகிக் கிடக்கும்

உள்ள தமிழரின் பாதிப்பேர் வீதியில் கிடப்பார்கள். மீதிப்பேர் மூச்சுவிடவும் எதிரியிடம் அனுமதி கேட்டு நிற்பார்கள்.

இந்தக் கொடுமை ஏன் வர வேண்டும்?
சிந்தித்துப் பாருங்கள்.

மானமிழந்து, வீரமிழந்து, மண்ணையிழந்து வாழும் வாழ்வு மகிமை தராது.

களுக்கு உணர்த்தியது. இதனால் அவர்கள் பூரித்துப் போயினர்.

இந்நிலையில் 'ஒப்பரேசன் யாழ்தேவி' ஆரம்பிக்கப் பட்டது. மிகவும் இரகசியமாக திட்டமிடப்பட்ட இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னரே மிகப்பெரிய தென்பதும் அதன் பயணம் நீண்டதென்ற செய்தியும் வெளிவந்தது அப்பொழுது பேரினவாதிகள், இராணுவம் விடுதலைப் புலிகளையும், தமிழ்மக்களையும் ஒழித்துக்கட்டும் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டதாகவே கருதினர்,

இதற்கு ஏற்ற மாதிரியே பேரினவாதப் பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டன. ஆனையிறவில் இருந்து புறப்பட்ட இராணுவம் கிளாலியைக் கைப்பற்றி விட்டதாகவும் சாவகச்சேரியை நோக்கி முன்னேறி வருவதாகவும் புலிகள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டதாகவும் புலிகளின் இராணுவ தளபாடவளங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டதாகவும் அவை தெரிவித்தன. கிளாலி முற்றுகையின் மூலம் புலிகளின் நடமாட்டம் முடக்கப் பட்டு விட்டதாகவும் புலிகளின் இறுதிக்காலம் நெருங்கி விட்டதாகவும் அவை வீரம் பேசின.

இதைத்தவிர இராணுவத்தினரின் முன்னேற்றத்தை குறிக்கும் முகமாக பத்திரிகைகளின் முன் பக்கங்களில் பெரிய அளவில் யாழ் குடாநாட்டின் வர்ண நிறப் படங்களும் இராணுவம் முன்னேறும் வழிகள் என குறியீடுகளும் இடப்பட்டன. இக்குறியீடுகள் சாவகச்சேரி வரையிலும் இடம் பெற்றும் இருந்தன. அத்தோடு இராணுவம் முன்னேறிய தூரத்தை சில பத்திரிகைகள் 20 கிலோ மீற்றர் என்றும், சில பத்திரிகைகள் 12 கிலோ மீற்றர் எனவும் அளவு திட்டம் எதுவு மின்றித் தெரிவித்தன.

இதேவேளை, இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பை அவை பெரிதுபடுத்தவில்லை நூற்றுக்குமேற்பட்ட இராணுவம் கொல்லப்பட்டதாக அவை தெரிவித்திருந்தபோதும் புலிகளில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை இதைவிடப் பல மடங்கு என்ற ரீதியில் வெளியிடப்பட்ட செய்திகள் கவனத்தை கவரவில்லை. அத்தோடு டாங்கிகள், கவச வாகனங்கள் இழந்ததைப் பற்றியோ, புலிகளிடம் பெருமளவு ஆயுதங்களை பறிகொடுத்தது குறித்தோ அவை கண்டுகொள்ளவில்லை.

பௌத்த சிங்கள கடும் கோட்பாட்டாளர்களும், பத்திரிகைகளும் காட்டிய வெற்றி பெருமிதம் வெளிநாட்டு செய்திஸ்தாபனங்கள் குறிப்பிடும்படி இருந்தது. இதுபற்றி பி.பி ஸி குறிப்பிடுகையில் ''கடந்த ஒருவருடகாலமாக வாடியிருந்த கொழும்புத் தினசரிகள் யாழ்தேவி நடவடிக்கை பெரு வெற்றி எனப் பிரகடனம் செய்து வருகின்றன'' எனத் தெரிவித்திருந்தது. அதாவது யாழ்தேவி நடவடிக்கை பெரு வெற்றி என்றே தென்னிலங்கையில் பரவலாகக் கருதப்பட்டது.

இந்நிலையில் தான் திடீரென கிளாலியில் இருந்து இராணுவம் பின்வாங்கியது கிளாலி வெற்றி என்பது கனவு போலாகியது. தாங்கள் ஏமாற்றப்பட்டதாக பௌத்தசிங்களக் கடும் கோட்பாட்டாளர்கள் சீற்றமடைந்தனர். பத்திரிகைகள் தாங்கள் மக்களை ஏமாற்றியதை வெளிக்காட்டாமல் அரசு மீது பாயத் தொடங்கின. அரசாங்கம் கிடைத்த வாய்ப்பை தவற விட்டுவிட்டதாகத் தெரிவித்தன

ஆனால், அரசாங்கமும்சரி இராணுவமும்சரி என்ன செய்ய முடியும்? கிளாலியில் தரித்து நின்று யாழ். குடாநாட்டு முற்றுகையை தீவிரமாக்கி விடுதலைப் புலிகளையும், தமிழரின் போராட்டத்தையும் தோற்கடிக்க அவர்களுக்கென்ன ஆசையில்லையா?

ஆனால் அது எவ்வாறு முடியும்? புலோப்பளைச் சமரில் தாம்பட்ட அடியும் தாங்கள் கைப்பற்றிய இடத்தை விட்டு வரவில்லை, சென்ற இடத்தில் இருந்து தப்பிவந்திருக்கின்றோம் என்பதும் அவர்களுக்கல்லவா புரியும். ஆனால் வெட்கத்தைவிட்டு சிங்களப் பேரினவாதிகளிடம் இதை அவர்கள் எப்படிக் கூறமுடியும்? அவ்வாறு கூறின் அவர்களின் கதாநாயகர் பாத்திரம் என்னாவது?

---

[மாஸ்கோ]

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் தமது நாட்டில் அரசியல் சாசன நீதிமன்றம் செயற்படுவதை இடைநிறுத்தி வைத்துள்ளார். அத்துடன் மாஸ்கோ நகரசபை உட்பட அந் நகரத்திலுள்ள பல்வேறு பிராந்திய சபைகளையும் கலைத்திருப்பதன் மூலம் ரஷ்ய அதிகாரத்தின் மீதான தமது கட்டுப்பாட்டை மேலும் இறுக்கமாக்கியுள்ளார்.

நீதிமன்றத்தின் செயற்பாடுகள் யாவும் பாராளுமன்றத்திற்கான புதிய தேர்தல்கள் நடைபெறும்வரை இடைநிறுத்தி வைத்திருப்பதாக அதிபர் பொறிஸ் யெல்ட்சின் அதிபர் ஆணையொன்றின் மூலம் பிரகடனம் செய்துள்ளார். பிராந்திய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேர்தல்கள் நடத்துவதற்குப் பதிலாக அப் பதவிகள் இனிமேல் அதிபரின் நியமனம் மூலம் நிரப்பப்படும் எனவும் அதிபர் பொறிஸ் யெல்ட்சின் அறிவித்துள்ளார்.

இதேவேளை யெல்ட்சினுக்கு விசுவாசமான துருப்புக்களால் சின்னாபின்னமாக்கப்பட்ட வெள்ளை மாளிகை என்னும் பாராளுமன்றக் கட்டட வளாகத்திலிருந்து மேலும் 49 சடலங்களை அதிகாரிகள் மீட்டெடுத்தனர்.

இதேவேளை பாராளுமன்றத்தின் ஐந்து முக்கிய உறுப்பினர்களைக் கைது செய்யும்படி மாஸ்கோவில் வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## கிரிக்கட்டிலிருந்து ஓய்வு சிறிகாந்த் அறிவிப்பு

(சென்னை)

இந்திய கிரிக்கட் அணியின் முன்னாள் காப்டனும் தலைசிறந்த தொடக்க ஆட்டக்காரருமான கே. சிறிகாந்த் டெஸ்ட் போட்டித் தொடர்கள் உட்பட முதல்தர கிரிக்கட் போட்டிகள் எதிலும் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

அண்மையில் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். சுமார் பன்னிரண்டு ஆண்டுகளாக டெஸ்ட் போட்டிகளிலும், முதல்தர சுற்றுப் போட்டிகளிலும் விறுவிறுப்புடன் இவர் விளையாடி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 43 டெஸ்ட் பந்தயங்களிலும் 145 ஒருநாள் கிரிக்கட் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் இரு சதங்கள் உட்பட 2061 ஓட்டங்களை எடுத்துள்ளார் என்பதும், ஒருநாள் போட்டிகளில் 4,092 ஓட்டங்களை பெற்றும், 1989-ம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிரான இந்திய அணியின் கப்டனாக விளங்கியவர் ஆவார்.

## தமிழக மீனவர்களைக் காக்க உடனடி நடவடிக்கை எடுக்கவும்

### மு. கருணாநிதி கோரிக்கை

இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்களிலிருந்து தமிழக மீனவர்களைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி மத்திய மாநில அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்; நாகப்பட்டினம், தொண்டி, தூத்துக்குடி, இராமேஸ்வரம் பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதாகவும், இதனைத் தடுக்கும் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை மாநில அரசு தூண்டவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## சிரிய அமைச்சருடன் அமெரிக்க அதிபர் பேச்சு

அமெரிக்கா அதிபர் பில் கிளிண்டன் சிரியாவின் வெளியுறவு பாருக் அல். சாராவை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். சிரியாவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்துவது தான் இச் சந்திப்பின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையே பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின் நடைபெற்ற முதலாவது உள் மட்டப் பேச்சு இது என்பதும், வெள்ளை மாளிகையின் வழமையான சம்பிரதாயங்களுக்கு புறம்பாக இடம்பெற்ற சந்திப்பு இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் தேர்தல் இந்தியா கருத்து

பாகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள் காஷ்மீரில் ஆக்கபூர்வமான விளைவை ஏற்படுத்தும் என்று இந்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறியிருக்கிறார்.

டில்லியில் செய்தியாளர்கள் மத்தியில்பேசிய அவர் மேலும் கூறுகையில், புதியஅரசு காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவி அளிப்பதை நிறுத்தும் என்று நம்புவதாகவும்குறிப்பிட்டார்.

இதேவேளை ஐ. நா. தலைமைச் செயலாளரை நியூயோர்க்கில் சந்தித்த இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங் பாகிஸ்தானுடனான பிரச்சினைகளை சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்த்துக்கொள்ளலாம் என்று திட்டவட்டமாக தெரிவித்ததாக வெளியுறவு அமைச்சின் செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது.

## சோமாலியாவில் போர்நிறுத்தம் ஜெனரல் அய்டீட் அறிவிப்பு

[மொகாடிஸ்யூ]

சோமாலியாவின் கிளர்ச்சிக் குழுத் தலைவரான ஜெனரல் முகம்மது பாரா அய்டீட் அமெரிக்க மற்றும் ஐ,நா. துருப்புகளுடன் போரை நிறுத்துவதாக போர் நிறுத்தம் ஒன்றை பிரகடனம் செய்துள்ளார். தலைநகர் மொகாடிஸ்யூவில் இயங்கும் இரகசிய வானொலி ஒன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், அமெரிக்காவும், ஐ. நாவும் சண்டையை நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஐ.நா. அமைதிப்படையில் வந்த 24பாகிஸ்தானிய படையினர் ஜூன் மாதத்தில் கொல்லப்பட்டது பற்றிய எதியோப்பியா தலைமையிலான புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்காவின் சோமாலியா தொடர்பான கொள்கையில் வெளிப்படையானதொரு மாற்றம் தெரிந்த பிறகு ஜெனரல் அய்டீட் இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் விசேட தூதுவராக ராபர்ட் ஒக்லியை அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் அனுப்பியுள்ளார். அத்துடன் ஜெனரல் அய்டீட்டை தேடும் பணியை அமெரிக்கத் துருப்புகள் நிறுத்தியிருப்பதாகவும் கிளிண்டன் அறிவித்துள்ளார். ஜெனரல் அய்டீட்டுடன் மோதலை தவிர்க்க அமெரிக்கா விரும்புவதாகவும், ஜெனரல்அய்டீட் முன்வைத்த சமாதான யோசனையை வரவேற்பதாகவும், மொகாடிஸ்யூவில் ஐ நாவின் நடவடிக்கைப் பணிக்குழு தலைவர் அட்மிரல் ஜோனாதன் தெரிவித்துள்ளார்

---

நீங்கள் எப்படித் தூங்கிக்கிடக்கலாம்?

இரு விழிகள் சிவப்பேற விழித்துக்கொள்ளும் நேரம் குருதிக் கலன்கள் கொதிப்பேற வேண்டிய காலம்.

வீட்டுக்கொருவராயினும் நாட்டுக்காகப் போராட வரத்தவறின் பாட்டும் கூத்துடனும் எதிரி வந்து உங்கள் படலையைத் தட்டுவான்.

கண்ணுக்கெதிரே உங்கள் தாயை, தங்கையை, தம்பியை தள்ளாடும் உங்கள் பேரனை ஒருவரையும் மிச்சமின்றி ஒத்தியெடுப்பான்.

இன்னும் இனியும் கண்களை மூடிவிட்டு விழிகளை இறந்து பார்த்தால்.

உங்கள் கைகள் கட்டப்பட்டிருக்கும். உங்கள் தங்கை எல்லாம் இழந்து எதிரிலே.. கிடப்பாள்.

நீங்கள் குந்தியிருந்த குடியிருப்புக்கள் சின்னா பின்னமாகிக் கிடக்கும்.

உள்ள தமிழரின் பாதிப்பேர் வீதியில் கிடப்பார்கள். மீதிப்பேர் மூச்சுவிடவும் எதிரியிடம் அனுமதி கேட்டு நிற்பார்கள்.

இந்தக் கொடுமை ஏன் வர வேண்டும்?
சிந்தித்துப் பாருங்கள்.

மானமிழந்து, வீரமிழந்து, மண்ணையிழந்து வாழும் வாழ்வு மகிமை தராது.

வந்த எதிரியை வாசலில் வரவிட்டு குந்தியிருப்பது பெருமை தராது.

தமிழனின் வேர்கள் வீரம் உறிஞ்சி விளைந்ததே தவிர மானமிழந்து மரத்துப் போனவை அல்ல.

யானையை கூட அடக்கினாள் ''அரியாத்தை'' என்ற தமிழிச்சி, யாரிவள் உன் பேத்தி.

பூனைக்கண்ணோடு புகுந்த அன்னியனை ஓட விரட்டினான் பண்டார வன்னியன். யாரிவன் உன் பூட்டன்

இந்த வீரத்தின் பாலருந்திய நீ மட்டும் எப்படி விழுந்து கிடக்கலாம்

முந்தியெங்கள் பரம்பரையென்றால் இந்நேரம் வேலெங்கே? வாளெங்கே? வெற்றிக்கொடியெங்கே? தேரெங்கே? என்று தேடியிருப்பார்கள்.

தாயும், மனைவியும் கொற்றவைக்கு முன்னால் கூத்தாடிவிட்டு நெற்றியிலே திலகமிட்டு வழியனுப்பியிருப்பார்கள்

வெற்றி அல்லது வீரச்சாவு என்று தமிழன் களம் நோக்கிப் புறப்பட்டிருப்பான்

இந்தவரலாறு அன்றுடன் முடிந்து விடவில்லை.
எதிரிக்கு நாங்கள் இதை சொல்லிவைப்போம்

தமிழனின் நாடி நரம்புகளில் ஓடுவதெல்லால் வீரத்தின் குருதி
தமிழனின் நெஞ்சில் எரிவதெல்லாம் மானத்தின் நெருப்பு

இந்தத் தடவை எதிரிக்கு நல்லபாடம் புகட்டுவோம்.

பிரபாகரன் காலம் பொற்காலம் என்று சரித்திரம் குறித்து வைக்கட்டும்

தமிழன் வெற்றி பெற்ற வரலாறு விளங்கட்டும்
இனிப் போருக்கான சங்கு முழங்கட்டும்

– புதுவை இரத்தினதுரை

---

## குவைத்திலிருந்து திரும்பியோருக்கு நட்டஈடு வழங்கப்படலாம்

[கொழும்பு]

வளைகுடா யுத்தத்தின் போது குவைத்திலிருந்துநாடு திரும்பிய இலங்கையர்களுக்கு ஐம்பது சதவீத நட்டஈடு வழங்கப்படவுள்ளது. ஜெனிவாவில் செயற்படும் வளைகுடா யுத்த நட்டஈட்டு ஆணைக்குழு இதற்கான உறுதி மொழியை வழங்கியுள்ளது. இந்த நட்ட ஈட்டுத் தொகை அடுத்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதிகளுக்குள் வழங்கப்பட்டு விடும் என்று உள் நாட்டலுவல்கள் பொது நிர்வாக மாகாண அமைச்சு அறிவித்துள்ளது.

## பிறப்புப் பதிவு புத்தகங்கள் வந்தன

யாழ். பதிவாளர் திணைக்களத்திற்கு பிறப்புப் பதிவுப் புத்தகங்கள் 'குமாரி' கப்பல் மூலம் நேற்று முன்தினம் எடுத்துவரப்பட்டன. (யோ)

ஈழநாதம்

# சிறிலங்கா தனது படைகளை கட்டுப்படுத்த வேண்டும்

## இந்தியா கோரிக்கை

(லண்டன்)

இந்திய மீனவர்களை சிறிலங்கா கடற்படை கொன்றது இந்திய கடல் எல்லையினுள் வைத்துத்தான் என இந்தியா நேற்று வெளியிட்ட கண்டன அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததாக பி.பி.ஸியின் சென்னை செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது படைகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் எனவும் இந்தியா கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் இந்திய - இலங்கையின் தற்போதைய நல்லுறவு சூழ்நிலை பாதிக்கப்படலாம் எனவும் பி. பி. ஸி குறிப்பிட்டது வடக்கில் மீன்பிடி படகுகளை நெருங்கும்போது கண்டபடி சுடாது இருக்கும்படி கடற்படைக்கு உறுதியான உத்தரவை வழங்குமாறு இந்தியா இலங்கை அரசை கோரியுள்ளது.

## தமிழகமீனவர்மீது தாக்குதல் சிறிலங்கா அரசிடம் ஆட்சேபம்

(கொழும்பு)

கச்சதீவுக்கு அருகே நேற்று முன்தினம் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்டட்டு உயிரிழந்த சம்பவம்தொடர்பாககொழும்பிலுள்ள இந்திய தூதுவரகம் மூலம் இந்திய அரசு கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரக வட்டாரங்கள் இது பற்றித் தெரிவிக்கையில் இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை அரசு புலன் விசாரணை நடத்த வேண்டும் என்றும், இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்திலும் திரும்பத் திரும்ப நிகழாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளது

அத்துடன் இந்திய மீனவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடிப்பதற்கு உள்ள உரிமையை இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவின் அடிப்படையில் இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட பின்னரும் இத்தகைய சம்பவங்கள் ஏற்பட்டிருப்பது தொடர்பாக வருத்த மடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எங்களால் மட்டுமே இது முடியும்!

PAPER CLASS

ஆரம்பம்

14-10-93

பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

யூனிவேர்சல்

யாழ்ப்பாணம்.

(இ-7580)


## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள பாலர் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டு விழா இன்று காலையில் அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பூம்புகார் நித்தியா கல்விக்கூட அதிபர் க. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம், நல்லூர் கொத்தணி அதிபர் மு. இராமலிங்கம், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்களான வ. சந்திரசேகரம், ச. தவராசா ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

## கிளாலி கரையோரம் நோக்கி கடற்படை தாக்குதல்

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த சிறிலங்காகடற்படையினர் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் கிளாலி கரையை நோக்கி திடீரென பீரங்கி தாக்குதலையும் கலிபர்தாக்குதலையும் நடத்தினர். இதே வேளை நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று கடல்கரையோரம் நோக்கி கலிபர் தாக்குதலை நடத்தியது. எனினும் சேதம் எதுவும் இல்லை. (86)

## சுகாதாரம் பேணும்படி துண்டுப்பிரசுரம் வெளியீடு

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள தேநீர்க்கடை, சாப்பாட்டுக்கடை உரிமையாளர்களுக்கு சுகாதாரம் பேணல் சம்பந்தமான அறிவு[illegible]த்தல் ஒன்றினை துண்டுபபிரசுர மூலம் வலிமேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் தென்படும் தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு முன்னோடியாக தேநீர், சாப்பாட்டுக்கடை உரிமையாளர்களையும், பொதுமக்களையும் கடைப்பிடிக்க வேண்டியநடைமுறைகளை சுகாதார அடிப்படையில் அணுகுமாறு அத்துண்டுப்பிரசுர மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி துண்டுப்பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்ற தவறும் உணவக்கடை உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் இதுபற்றி பொதுமக்களையும், சுகாதார சம்பந்தமான ஏனைய வசதிகளையும் பேணுமாறு வலிமேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் செல்வி ரூபினி கனகரட்னம் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## பொ. க. தே. தேர்வாளர் கூட்டம் பிற்போடப்பட்டது

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு பரீட்சையின் தேர்வாளர்களுக்கான கூட்டம் முன்னர் அறிவிக்கப்பட்டபடி இன்று நடைபெறமாட்டாது என்றும். அவை நாளையும் நாளை மறுதினமும் பின்வரும் ஒழுங்கில் நடைபெறுமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். கல்விக் கோட்டம், மற்றும் வேலணைக் கோட்ட முதன்மைத் தேர்வாளர், துணைத் தேர்வாளர்களுக்கான கூட்டம் இராமநாதன் கல்லூரியில் காலை 10. 30 மணிக்கும், பண்டத்தரிப்புக் கோட்ட தேர்வாளர்களுக்கான கூட்டம் பிற்பகல் 1. 00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

வடமராட்சிக் கோட்ட தேர்வாளர்களுக்குநாளைமறுதினம் காலை 8. 30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியிலும், தென்மராட்சிக்

# ரஷ்ய ஜனாதிபதி தேர்தல் கோர்பச்சேவ் போட்டி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தாமும் போட்டியிட எண்ணியிருப்பதாக முன்னாள் சோவியத் யூனியனின் ஜனாதிபதி மிகெயில் கோர்பச்சேவ் பி.பி.ஸி பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள ரஷ்ய பாராளுமன்ற தேர்தல் முறையாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுமா என்பது சந்தேகமே. பாராளுமன்ற தேர்தல் முடிவுகளையும் ரஷ்ய அரசியல் சூழலையும் பொறுத்தே தாம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதா என தீர்மானிக்கவுள்ளதாகவும் கோர்பச்சேவ் மேலும் தெரிவித்தார்.

## சட்ட விரோத காடழிப்பில் அரசியல்வாதிகளும் ஈடுபாடு

### -அமைச்சர் காமினி அத்துகோரள

[கொழும்பு]

சட்ட விரோதமாக காடழிக்கும் நடவடிக்கைகளில் சிவில் நிர்வாக அதிகாரிகள், பாதுகாப்பு துறை அதிகாரிகள் போன்ற அரச அதிகாரிகளுடன் அரசியல் வாதிகளும் ஈடுபடுகின்றனர் எனத் தெரிய வருகின்றது. இவ்வாறு காணி நீர்ப்பாசன, வனவள அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துகோரள தெரிவித்தார்.

இரத்தினபுரி நகரில் அண்மையில் தேசியமரம் நடுகை இயக்கத்தை ஆரம்பித்து வைத்துப்பேசிய அவர் மேலும் பேசுகையில் 1948-ம் ஆண்டில் எமது நாட்டில் 55 சதவீத வன வளம் இருந்தது. ஆனால் இன்று அது 20 சத வீதமாக குறைந்து விட்டது என்றும் தெரிவித்தார்.

## ஐக்கியதேசியக் கட்சியுடன் கூட்டு எதுவுமில்லை

### காமினி தெரிவிப்பு

[கொழும்பு]

எந்தக் கட்டத்திலும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு சேர மாட்டாது என்று அக் கட்சி தலைவர் காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

வடமேல் மாகாணசபையின் முதலமைச்சராக பதவி பிரமாணம் செய்த இக் கட்சி செயலாளர் பிரேமச்சந்திராவுடன் நடத்திய பேச்சுக்களின் போது இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுடனான பேச்சுக்கள் முன்னாள் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாச காலத்தில் ஏற்பட்ட மனத்தாக்கங்களையும், கோபதாபங்களையும் தொடராது இருப்பதற்கே பயனளித்தது எனவும் வேறு ஒரு நோக்கமும் இல்லை எனவும் கூறினார்.

## கடல் தொழிலாளருக்கு வறுமைநிவாரணம் வழங்குக

### யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

(தொல்புரம்)

கடல் தொழிலாளருக்கு வறுமை நிவாரணம் வழங்கும்படி கோரும் மகஜர் ஒன்றினை வலிகாமம் மேற்கு, தெற்குகிராமிய'கடல்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்புக்களினதும், கூட்டுறவுச் சங்கங்களினதும் ஒருங்கிணைப்பு ஒன்றியம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் ஊடாக யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி மகஜரில் நவாலி, சாவக்காடு, மானிப்பாய் ஆகிய பகுதிகளிலுள்ள மீன்பிடித் தொழிலினை மேற்கொள்ள முடியாத நிலையில் அல்லலுறும் மீனவக் குடும்பங்கள், சிறுகடல் தொழில் ஊதியத்தை நம்பி வாழும் அம்மக்கள் அன்றாட வாழ்க்கைக்கே போதிய வருமானமின்றி திண்டாடுகிறார்கள் எனவும் இவர்களுக்கு நிவாரண உதவிகள் கிடைப்பது மிக அரிது எனவும் ஒன்றியத்தினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (41)

## அரச சார்பற்ற நிறுவனம் செயற்பாடுகளில் சந்தேகம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சேவைகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற சில நிறுவனங்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவற்றை அவதானித்து வருகின்றோம் தேவையாயின் புதிய சட்ட திட்டங்களையும் கொண்டு வருவோம்.

இவ்வாறு புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகசேவைகள் ...க்கத் தலங்கள் புனரமைக்கப்படும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

10-10-93

எங்களால் மட்டுமே
இது முடியும்!

PAPER CLASS

ஆரம்பம்
14-10-93

பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்து கொள்ளுங்கள்.

யூனிவேர்சல்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(இ-7580)



## கணக்காய்வாளர்கள் தேவை

(வன்னிப் பிராந்திய பொது நிர்வாக அலுவலகம்)

வன்னிப் பிராந்தியத்தில் கணக்காய்வு செய்யக் கணக்காய்வாளர்கள் தேவைப்படுகின்றனர்

கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கும், கூட்டுறவுத் துறையில் பணியாற்றிய அனுபவம் உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை இல்லை. தங்குமிட வசதியும், போக்கு வரத்து வசதியும் அளிக்கப்படும்.

நேரில் பேசி, சம்பளம் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**யாழ். வட்டச் செயலகம்**
(ராஜா டீசல் இஞ்ஜினியேர்ஸ்க்கு அருகாமையில்)
**மருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7579)


## "வடபிராந்திய பேக்கரி ஊழியர் பேரவை"

16. 10. 93 சனிக்கிழமை காலை 10 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்துக்கு வடபிராந்தியத்தில் உள்ள சகல ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறும் உறுப்பினராக பதிவு செய்யாதவர் ள் அனைவரும் தங்கள் அங்கத்தவர் படிவங்களை பெற்றுக்கொள்ளுமாறும் - அன்றைய தினம் நடைபெறும் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் த. ஈ. வி. புலிகள் தொழிற்சங்க பொறுப்பாளர் கலந்து சிறப்பு சொற்பெருக்காற்றுவார்கள் என்பதையும் சகல தொழிலாளர் கவனத்துக்கும் தெரியப்படுத்திக்கொள்கிறோம். உரிமையாளர்கள் தயவுசெய்து ஊழியர்களை அனுப்பிவைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மதிமுகராசா
தலைவர்,
இடைக்கால நிர்வாகசபை.

(6259)

வித்துள்ளார்.

தற்போது நாட்டில் தென்படும் தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு முன்னோடியாக தேநீர், சாப்பாட்டுக்கடை உரிமையாளர்களையும், பொதுமக்களையும் கடைப்பிடிக்க வேண்டியநடை... வும் இதுபற்றி பொதுமக்களையும், சுகாதார சம்பந்தமான ஏனைய வசதிகளையும் பேணுமாறு வலிமேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் செல்வி ரூபினி கனகரட்னம் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## பொ. க. தே. தேர்வாளர் கூட்டம் பிற்போடப்பட்டது

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு பரீட்சையின் தேர்வாளர்களுக்கான கூட்டம் முன்னர் அறிவிக்கப்பட்டபடி இன்று நடைபெறமாட்டாது என்றும். அவை நாளையும் நாளை மறுதினமும் பின்வரும் ஒழுங்கில் நடைபெறுமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். கல்விக் கோட்டம், மற்றும் வேலணைக் கோட்ட முதன்மைத் தேர்வாளர், துணைத் தேர்வாளர்களுக்கான கூட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நாளை காலை 8. 30 மணிக்கும், மருதனார்மடக் கோட்ட முதன்மைத் தேர்வாளர், துணைத் தேர்வாளர்களுக்கான கூட்டம் இராமநாதன் கல்லூரியில் காலை 10. 30 மணிக்கும், பண்டத்தரிப்புக் கோட்ட தேர்வாளர்களுக்கான கூட்டம் பிற்பகல் 1. 00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

வடமராட்சிக் கோட்ட தேர்வாளர்களுக்குநாளைமறுதினம் காலை 8. 30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியிலும், தென்மராட்சிக் கோட்ட தேர்வாளர்களுக்கான கூட்டம் பிற்பகல் 1. 30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

## யாழ். மாவட்ட கொத்தணிகள் டிசம்பர் வரை இயங்கும்

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கொத்தணிகளும் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை தொடர்ந்து இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் முதலாம் திகதி முதல் கோட்டங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கேற்ப பிரிக்கப்பட்ட போதும்! கொத்தணி அமைப்பு நிர்வாகம் டிசம்பர் 31ஆம் திகதி வரை முன்னர் இயங்கியதுபோன்றுஇயங்கும்.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் புதிய திட்டத்தின்படி வலிமேற்கு சங்கானை பிரதேச கல்வி அலுவலகம், வலி தென்மேற்கு - சண்டிலிப்பாய் பிரதேச கல்வி அலுவலகம், வலிவடக்கு - தெல்லிப்பழை பிரதேச கல்வி அலுவலகம்; தீவுப்பகுதி ஊர்காவற்றுறை பிரதேச கல்வி அலுவலகம் என நான்கு கல்வி அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கரபந்தாட்ட இறுதிப்போட்டி

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட மட்டத்தில் நடாத்தும் 'பாரதி' சுற்றுக் கேடயத்துக்கான செற் அப் முறையிலான கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று இரவு 7 15 மணிக்கு ஆரம்பமாகும். மின்னொளியல் நடைபெறும் இப்போட்டியில் பெண்களுக்கான காட்சி போட்டியில் பாரதி வி. க. எதிர் சென் அன்ரனீஸ் வி க. இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய வி. க. எதிர் சென் அன்ரனீஸ் வி. க. இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய வி. க. எதிர் சென் அன்ரனீஸ் வி க. இரவு 10 00 மணிக்கு பரிசளிப்பு விழா நடைபெறும்.

### விடுதலைப்

தணிகைசெல்வி தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது

2 ஆம் லெப். மாலதியின் நினைவு தின நிகழ்வுகள் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

## யாழ். குடாநாட்டு வீதிகளில் அதிகளவு வாகனங்களாம்

'யாழ் குடாநாட்டின் வீதிகளில் அதிகளவு வாகனங்கள் ஓடித்திரிகின்றன. இதற்குக் காரணம் யாழ். குடாநாட்டுக்கு அதிகளவு மண்ணெண்ணெய் விநியோகிப்பதுதான் இவ்வாறு விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் கட்டுப்படுத்தப்பட வேண்டும்'' இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர் கே எச். ஜே. விஜயதாசா ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற ஜனாதிபதி கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் இவ் ஆலோசனை வழங்கப்பட்டதாக கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (க), (நி)

### 40 மாதங்கள்

தொடர்ந்து நாற்பது மாதங்களாக எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

இவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே அதிகம்பேர் என்றும் சமீபத்தில் இப் பகுதி மக்களின் நிலையை அறியச்சென்ற அதிகாரிகள் இதை அறிந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஷெல்

நடாத்தப்பட்டது.

இத்தாக்குதல் நடாத்தப்பட்டபோது மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடிப் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டனர். ஆயினும் திட்டமிட்டபடி படகுச்சேவை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. பூநகரி பகுதியிலிருந்தும் குறிப்பிட்டளவு பயணிகள் கிளாலிநோக்கி வந்தனர்.

சமூக அபிவிருத்தி அமைப்புக்களினதும், கூட்டுறவுச் சங்கங்களினதும் ஒருங்கிணைப்பு ஒன்றியம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் ஊடாக யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி மகஜரில் நவாலி, ... கள், சிறுகடல் தொழில் ஊதியத்தை நம்பி வாழும் அம்மக்கள் அன்றாட வாழ்க்கைக்கே போதிய வருமானமின்றி திண்டாடுகிறார்கள் எனவும் இவர்களுக்கு நிவாரண உதவிகள் கிடைப்பது மிக அரிது எனவும் ஒன்றியத்தினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (41)

## அரச சார்பற்ற நிறுவனம் செயற்பாடுகளில் சந்தேகம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சேவைகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற சில நிறுவனங்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவற்றை அவதானித்து வருகின்றோம் தேவையாயின் புதிய சட்ட திட்டங்களையும் கொண்டு வருவோம்.

இவ்வாறு புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகசேவைகள் அமைச்சர் தயாரத்தின வியாழக்கிழமை -பாராளுமன்றத்தில்தெரிவித்தார்.

போதிய நிதி கிடைத்த பின்னர், வடக்கு கிழக்கு மாகாணங்களில் சேதமடைந்த வணக்கத் தலங்கள் புனரமைக்கப்படும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

### கலந்துரையாடல்

வலிகாமம் கடற்புலிகளின் வட்டத்திற்கு உட்பட்ட அராலி, நாவாந்துறை, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, மணிப்புரி, மற்றும் கிழக்கு அரியாலை வரையிலான பகுதிகளில் செயற்படும் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நாளை நடைபெறவுள்ளது. வலிகாமம் கிழக்கு அரசியற்துறையின் குருநகரில் அமைந்துள்ள செயலகத்தில் இக் கலந்துரையாடல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

...போது இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுடனான பேச்சுக்கள் முன்னாள் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாச காலத்தில் ஏற்பட்ட மனத்தாக்கங்களையும், கோபதாபங்களையும் தொடராது இருப்பதற்கே பயனளித்தது எனவும் வேறு ஒரு நோக்கமும் இல்லை எனவும் கூறினார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 10-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11143

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
27-6821, 28-4147, 27-2143, 43-1062, 24-5703, 24-2944, 41-9166, 41-8292, 41 7041, 24-0878, 26 0573, 41-9265, 24-5121, 43-2323, 28-5862, 24-7672, 22-3611, 41-8068, 21-9186

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
இல்லை


## தன்னியக்க சிலிண்டர் இயந்திர இயக்குநர் தேவை

தன்னியக்க சிலிண்டர் இயந்திர (ORIGINAL HEIDELBERG CYLINDER) இயக்குநர் தேவை. முன் அனுபவச் சான்றிதழ்களுடன் 15-10-93 காலை 10-00 மணிக்கு நேரில் வரவும்.

**ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(இ)


## மரண அறிவித்தல்

### திரு. மயிலு சுப்பையா ஆச்சாரி

திருநெல்வேலி கிழக்கு அரசடி வீதியை பிறப்பிடமாக கொண்டவரும் கோண்டாவில் சந்தியிலும் ஆடியபாத வீதியிலும் இரும்பு வேலையை மேற்கொண்டவருமான மயிலு சுப்பையா ஆச்சாரி சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (11-10 93 இல்) 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. தனபாலசிங்கம்

''பத்மாஜினி அகம்''
அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

(6258)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது